


அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com


அ.எண்:304/2015

தேதி : 22/12/2015

# சமத்துவ மக்கள் கட்சி
# சேலம் மேற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்
# எடப்பாடியில் 27ந்தேதி நடக்கிறது !..
# தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ பங்கேற்பு

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சேலம் மேற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் 27.12.2015 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3 மணிக்கு சேலம் மாவட்டம் எடப்பாடியில் வைத்தியலிங்கம் அரங்கில் நடைபெறுகிறது.

எடப்பாடி தொகுதிச் செயலாளர் கே.செங்கோடன் தலைமையில், மாவட்டச் செயலாளர் ஏ.மைக்கேல் தங்கராஜ் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ, துணைத் தலைவர் ஏ.நாராயணன் எம்.எல்.ஏ, பொதுச் செயலாளர் கரு.நாகராஜன், கொள்கை பரப்புச் செயலாளர் ஆர்.ஜெயப்ரகாஷ் துணை பொதுச் செயலாளர் என்.என்.சண்முகசுந்தரம், அரசியல் ஆலோசகர் பா.பன்னீர்ச்செல்வம், இளைஞரணிச் செயலாளர் சாமுவேல் மேத்யூ, வர்த்தகரணிச் செயலாளர் கே.ஜே.நாதன், மாநில மகளிரணி துணைச் செயலாளர்கள் மா.ரா.ஜெமிலா, எம்.பாகீரதி, சேலம் மாநகர் மாவட்டச் செயலாளர் ஜே.கே.என்.முருகேசன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஜவஹர் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

முன்னதாக எடப்பாடி நகரில் கட்சியின் கொடியை ஏற்றி வைத்து தலைவர் அவர்கள் கல்வெட்டைத் திறந்து வைக்கிறார். கொடியேற்றும் இடத்தில் இருந்து நிகழ்ச்சி நடைபெறும் அரங்கத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகிறார்.

சேலம், எடப்பாடி, மேட்டூர், மகுடஞ்சாவடி, சங்ககிரி, குள்ளம்பட்டி, ஜலகண்டபுரம், தாரமங்கலம், ஓமலூர் போன்ற பகுதிகளிலிருந்து கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள இருக்கின்றனர். பல முக்கிய தீர்மானங்கள் செயல்வீரர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட இருக்கிறது. சேலம் மேற்கு மாவட்ட நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டம் வெற்றி பெற சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

நன்றி,வணக்கம்

என்றும் அன்புடன்,

பொதுச் செயலாளர்